ஜூன் 2012
JUNE 2012
6 - 2

VASANTHAM
Tamil Monthly
مجلة الربيع   ملحق مجلة البشرى باللغة التاميلية

வசந்தம்

மாத இதழ்
The Spring

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

கவித்தூறல்கள்

மதுவின் மயக்கம்..!
வாழ்வில் கலக்கம்..!!

உடல்நல சிறப்பிதழ்..!

"ஹிஜாமா" மருத்துவம்..! நிவாரணத்துக்கு உத்தரவாதம்..!!

நபி மருத்துவம்

நோய்த் தடுப்பு முறைக்கு வழிச்சாதனம்.,!

பெருகும் மருத்துவ செலவுகள்.! தவிக்கும் நடுத்தர குடும்பங்கள்..!!

இலவச வெளியீடு

جمعية النجاة الخيرية

ISLAM PRESENTATION COMMITTEE

தூய்மை பேணுங்கள்..!
இறைநம்பிக்கை போற்றிடுங்கள்..!!

உங்கள் இல்லங்களையும் படுக்கையறைகளையும் தூய்மையாக வைத்திருங்கள்..!

உங்கள் நகரங்களையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருங்கள்..!

“.... தூய்மையை மேற்கொள்பவர்களைத்தாம் அல்லாஹ்வும் நேசிக்கின்றான்..!”
திருக் குர்ஆன் 9:108

ஏகஇறைசார் புண்ணியஸ்தலங்களை தூய்மையாக வைத்திருங்கள்..!

ஏகஇறை இல்லங்களான மஸ்ஜித்களை தூய்மையாக வைத்திருங்கள்..!

VASANTHAM - June 2012 FInal New.indd 2 6/12/12 12:24:27 PM

The "11th" Holy Qur'an Memorization Competition
للمهتدين الجدد والجاليات المسلمة غير العربية
For New Muslims & Non-Arab Muslim Communities
لحفظ القرآن الكريم

11

திருக் குர்ஆன் மனனப் போட்டி

அரபியரல்லாத முஸ்லிம்களுக்கும்
புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருக்குமானது

போட்டிப் பிரிவுகள்

இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்களிலும் தமிழ்மொழி சார்ந்த முஸ்லிம்களிலும் உள்ள 12 வயதுக்கு உட்பட்டசிறுவர் - சிறுமியர்களுக்கானது!

முதலாம் பிரிவு (திருக் குர்ஆனில் 1 ஜூஸ்உ மனனமிடல்)
இரண்டாம் பிரிவு (திருக் குர்ஆனில் 1 ஹிஸ்புவை மனனமிடல்)
மூன்றாம் பிரிவு (திருக் குர்ஆனில் 13 ஸூராக்களை மனனமிடல்)

இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்களுக்கானது!

முதலாம் பிரிவு (திருக் குர்ஆனில் 1 ஜூஸ்உ மனனமிடல்) 5 வருடங்கள்
இரண்டாம் பிரிவு (திருக் குர்ஆனில் 20 ஸூராக்களை மனனமிடல்) 3 முதல் 5 வருடங்கள்
மூன்றாம் பிரிவு (திருக் குர்ஆனில் 12 ஸூராக்களை மனனமிடல்) 1 முதல் 3 வருடங்கள்
நான்காம் பிரிவு (திருக் குர்ஆனில் 07 ஸூராக்களை மனனமிடல்) 1 வருடம் வரை
அடைப்புக்குறிக்கு வெளியே உள்ள வருட எண்ணிக்கை இஸ்லாத்தைத் தழுவி ஆன காலகட்டத்தைக் குறிக்கும்

அரபியரல்லாத முஸ்லிம்களுக்கானது!

முதலாம் பிரிவு (திருக் குர்ஆனில் 05 ஜூஸ்உ-க்களை மனனமிடல்)
இரண்டாம் பிரிவு (திருக் குர்ஆனில் 04 ஜூஸ்உ-க்களை மனனமிடல்)
மூன்றாம் பிரிவு (திருக் குர்ஆனில் 03 ஜூஸ்உ– வை மனனமிடல்)
நான்காம் பிரிவு (திருக் குர்ஆனில் 02 ஜூஸ்உ மனனமிடல்)
ஐந்தாம் பிரிவு (திருக் குர்ஆனில் 01 ஜூஸ்உ மனனமிடல்)

போட்டி நிபந்தனைகளும், விதிமுறைகளும்

1.இப்போட்டி இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்களுக்கும், அரபிமொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத முஸ்லிம்களுக்குமானது.2. போட்டி ஆண்,பெண் இருபாலாருக்குமானது. 3. இப்போட்டியில் பங்கு பெறுவோர் கண்டிப்பாக குவைத் அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். 4. முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் குறிப்பிட்ட பிரிவில் கலந்துகொண்டு வெற்றி பெற்றோர், அதே பிரிவில் இம்முறை பங்குபெற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.எனினும் அவர்கள் அதற்கு மேலதிகமான பிரிவில் கலந்துகொள்ளலாம். 5. புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோர் மேலதிகமான எந்தப் பிரிவிலும் கலந்துகொள்ளலாம்.அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதற்கான சான்றிதழ் நகலை இணைக்க வேண்டும். 6. போட்டிக்காக விண்ணப்பித்தவர்களுக்கான பூர்வாங்க போட்டித் தேர்வுகள் (Preliminary Competitions) ஆண்களுக்காக மட்டும் IPC தலைமையகத்தில் 25.06.2012 முதல் 15.07.2012 வரை நடைபெறும்.இதில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மட்டுமே மஸ்ஜித்-அல்-கபீரில் நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்! 7. இறுதிப் போட்டிகள் 30.07.2012 முதல் 02.08.2012 வரை மஸ்ஜித்-அல்-கபீரில் நடைபெறும் 8. பதிவு செய்தலுக்கான இறுதித் தேதி 10.07.2012 9. விண்ணப்பித்தவர்களுக்குரிய சரியான போட்டித் தேதி SMS மூலம் அறிவிக்கப்படும்.10.வெற்றி பெறுவோருக்கான பரிசுகள் நிறைவு விழாவில் வழங்கப்படும். அதற்குரிய நாள்,இடம் பின்னர் அறிவிக்கப்படும்.11. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:1 6/12/12 12:24:49 PM

திருக் குர்ஆன் மனனப் போட்டி

அரபியரல்லாத முஸ்லிம்களுக்கும்
புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருக்குமானது

விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர்
(Civil ID -இல் உள்ளபடி)

ஆங்கிலத்தில்
அல்லது
அரபியில் எழுதுக..!

இங்கே
புகைப்படம்
ஒட்டுக..!

குவைத் அடையாள அட்டை எண்

பாலினம் ஆண் ☐ பெண் ☐

வயது ☐ மொழி ☐

தேசிய இனம் (நாடு)

தொலைபேசி எண்கள்

தகுதி

ஆரம்பப் பள்ளி ☐ உயர்நிலை ☐
மேனிலை ☐ பட்டம் ☐

நீங்கள் மனனம் செய்த திருக்குர்ஆன்
ஜுஸ்உஸ்ரா-க்களின் எண்ணிக்கை

1	2	3	4	5	6
7	8	9	10	1	12
13	14	15	16	17	18
19	20	21	22	23	24
25	26	27	28	29	30

கடந்த வருடம் நடைபெற்ற போட்டியில்
பங்கு பெற்றவரா?

ஆம் ☐ இல்லை ☐

புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்களிலும்,
தமிழ்மொழி சார்ந்த முஸ்லிம்களிலும் உள்ள
12 வயதுக்குட்பட்டவர்கள்!

பிரிவு 1 2 3

இஸ்லாத்தில் புதிதாக
இணைந்தவர்கள்!

பிரிவு 1 2 3 4

அரபியரல்லாத முஸ்லிம்கள்!

பிரிவு 1 2 3 4 5

18 வயதுக்குக் குறைவானவர்களுக்கு..!
பெற்றோர்/காப்பாளர் பெயர்

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்!

ஒப்புதல் எண்

திருக் குர்ஆன் மனனப் போட்டி

அரபியரல்லாத முஸ்லிம்களுக்கும்
புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருக்குமானது

பிரிவுகள்

பிரிவுகள்	முதல் பரிசு	இரண்டாவது பரிசு	மூன்றாவது பரிசு
புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்களிலும் தமிழ்மொழி சார்ந்த முஸ்லிம்களிலும் உள்ள 12 வயதுக்குட்பட்டசிறுவர் - சிறுமியருக்கானது!			
1	80 KD 2 நபருக்கு	70 KD 2 நபருக்கு	60 KD 2 நபருக்கு
2	70 KD 2 நபருக்கு	60 KD 2 நபருக்கு	50 KD 2 நபருக்கு
3	60 KD 2 நபருக்கு	50 KD 2 நபருக்கு	40 KD 2 நபருக்கு
புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்களிலும் தமிழ்மொழி சார்ந்த முஸ்லிம்களிலும் உள்ள 15 வயதுக்குட்பட்டசிறுவர் - சிறுமியருக்கானது!			
1	110 KD 2 நபருக்கு	100 KD 2 நபருக்கு	90 KD 2 நபருக்கு
2	80 KD 2 நபருக்கு	70 KD 2 நபருக்கு	60 KD 2 நபருக்கு
3	70 KD 2 நபருக்கு	60 KD 2 நபருக்கு	50 KD 2 நபருக்கு
4	60 KD 2 நபருக்கு	50 KD 2 நபருக்கு	40 KD 2 நபருக்கு
அரபியரல்லாத முஸ்லிம்களுக்கானது!			
1	180 KD 2 நபருக்கு	170 KD 2 நபருக்கு	160 KD 2 நபருக்கு
2	160 KD 2 நபருக்கு	150 KD 2 நபருக்கு	140 KD 2 நபருக்கு
3	140 KD 2 நபருக்கு	130 KD 2 நபருக்கு	120 KD 2 நபருக்கு
4	120 KD 2 நபருக்கு	110 KD 2 நபருக்கு	100 KD 2 நபருக்கு
5	100 KD 2 நபருக்கு	90 KD 2 நபருக்கு	80 KD 2 நபருக்கு

போட்டியாளர்களைப் பதிவு செய்யும் இடங்கள்

ஆடவர் மட்டும்!

இஸ்லாமிய நிலையம் - தலைமையகம், குவைத் நகரம்

மகளிர் மட்டும்!

இஸ்லாமிய நிலைய மகளிர் தலைமை கிளை, ரவ்தா
சால்மியா கிளை

ஆடவர்-மகளிர் இருபாலாரும்!

இஸ்லாமிய நிலையம்
ஜஹ்றா,அம்காரா கிளை மங்கா∴ப் கிளை-கேதான் கிளை
-வ∴ப்ரா,ஸபாஹியா கிளை

போட்டி நடைபெறும் இடங்கள்

இஸ்லாமிய நிலையம் - தலைமையகம், குவைத் நகரம் -ஆடவர் மட்டும்!
2244117 Extn:208 செல்லிடைப்பேசி: 97266683
இஸ்லாமிய நிலையம் - மகளிர் தலைமையகம், ரவ்தா- பெண்கள் மட்டும்!
22511301-5 Extn. 105,109,117

போட்டிக்காக விண்ணப்பித்தவர்களுக்கான
பூர்வாங்க போட்டித் தேர்வுகள் (Preliminary Competitions)
ஆடவருக்காக மட்டும் IPC தலைமையகத்தில்
25.06.2012 முதல் 15.07.2012 வரை நடைபெறும்.
ஆடவருக்கான இறுதிப் போட்டிகள்
30.07.2012 முதல் 02.08.2012 வரை (மதியம் மற்றும் இரவு)
மஸ்ஜித்-அல்-கபீரில் நடைபெறும்

மகளிருக்கான போட்டிகள் மட்டும் IPC ரவ்தா,மகளிர் தலைமை கிளையில்
01 & 02.08.2012 இஸ்லாத்தில் புதிதாக இணைந்த மகளிருக்காகவும்
03 & 04.08.2012 வரை அரபியரல்லாத முஸ்லிம் மகளிருக்காகவும்
(இரவு 8 மணிக்கு) நடைபெறும்.

இருபாலாரும் பதிவு செய்தலுக்கான இறுதித் தேதி 10.07.2012

வசந்தம்

VASANTHAM
Al-Rabae-Tamil Monthly
JUNE 2012 ஜுன் 2012
மலர் 6 இதழ் 2

■ Chief Patron
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

■ General Supervisor
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

■ Editor
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

■ Editorial Board
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

■ Initial Lay-out
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

■ DESIGN
مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency

■ PUBLISHER
வெளியீடு
IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE

■ CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
Editor's Desk
22447526, 22444117
Extn: 208
Cell
97848068 -97266683 (Hotline)
FAX
22400057
Attn: IPC—VASANTHAM
e-mail மின்னஞ்சல்
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

■ WEBSITE வலைதளங்கள்
www.ipc.org.kw
www.vasanthamtamil.com

■ SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
www.facebook/vasanthamtamil
facebook twitter
www.twitter/vasantham2k
YouTube Scribd.

பக்கம் 19
பக்கம் 18
பக்கம் 10
பக்கம் 6

அட்டைப்பட வண்ண அமைப்பு: நாதிர் பிலால்,கலை மேற்பார்வை:ரவாத்,
அட்டைப்படத் திட்ட வரைவு:முஸவ்விர்-அட்டைப்பட மேற்பார்வை:அபூஅனஸ்

19 கவித்தூறல்கள்
யாஸர் அர:ஃபாத்

தள்ளாடும் மனிதன் கொண்டாடும் போதை..!

4 வாசகர் சுகந்தங்கள்
வாசக நெஞ்சங்களிடமிருந்து..!

5 தலையங்கம்
ஆசிரியரிடமிருந்து..!

10 துணை முகப்புக் கட்டுரை
ஏ.பி.எம்.இத்ரீஸ்

12 IPC வழித்தடங்கள்
அப்துல்லாஹ்

14 உடல் நலன்
இனியன்

18 மருத்துவம்
முஹமது யூசுஃப்

20 மழலையர் சோலை
சவுந்தர்யம்

21 தொடர்ச்சி
அகார் முஹம்மத்

22 தொடர்ச்சி
மு.அ. அப்துல் முஸவ்விர்

23 அறிவுப் போட்டி!

16
மருத்துவம்

مسابقة الرهيماني - بريد الربيع - كلمة العدد - اين تذهبون - أهمية الصحة في الإسلام - علاجة الأمراض بالطب النبوي - فوائد الحجامة - جدول الصحية في ضوء الإسلام - الحل - كيف يكون المسلم وفيا من وطنه ؟ - تحريم الخمر (نشيدة) - صفحة الأطفال - أخبار العالم - مسابقة

கல்விச் சிறப்பிதழ்..! அறிவுக்கு உரைகல்..!!

வசந்தம் மே, 2012 கல்விச் சிறப்பிதழ் கண்டேன்!எத்துணை விஷயங்கள் மிக அழகாய் வடித்திருந்தீர்கள்!எமது அறிவுக்கு நல்லதொரு உரைகல் என்றால் மிகையல்ல!குறிப்பாக முகப்புக் கட்டுரை, அடிப்படைக் கல்வியின் மறுசீரமைப்புக்குரிய அவசியத்தை ஆழமாய் அலசி முன்வைத்தது. வளரட்டும் வசந்தம்! ஓங்கட்டும் அதன் அறிவுப் பொக்கிஷம்!!

அஸ்மா
தஞ்சை - தமிழகம்
ருமைதியா - குவைத்

சமூகத்தின் உண்மையான தேவைகளை அழகாய் வடிப்பதில் வசந்தம் தனிநிகர் பாணியைக் கையாள்கின்றது.எந்த குறையாவது தென்படுகின்றதா என்று தேடிப் பார்த்தாலும் ஒருசில எழுத்து-அச்சுப் பிழைகளைத் தவிர எதனையும் காண முடிவதில்லை.கடிதம் பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதற்காக எழுதப்படுவது அல்ல இந்த உண்மை.மாறாக உள்ளத்தின் கதவுகள் உண்மையாய் வரும் தென்றல் வீச்சுக்கள். தொடரட்டும் உங்கள் பணி!

ஆமீர் முஹம்மத்
முத்தியால்பேட்டை - புதுச்சேரி
அதான் - குவைத்

வசந்தம் ஏப்ரல் 2012 இதழ் கண்டேன்! கலவரங்கள் பற்றிய விஷயங்கள் புள்ளி விரங்களுடன் மிக நேர்த்தியாய் வழங்கிய பாணி, சர்வதேச ஆங்கில சஞ்சிகைகளுக்கு இணையாக இருந்தது. அதுசமய படங்களுடன், வசன தவிப்புக்கள் நெஞ்சை நெகிழச் செய்துவிட்டன. குறிப்பாய் “நகரத்தின் போலித்தனங்கள் இன்றி,உழைப்பை மட்டுமே விதைத்து, கூலியை அறுவடையாகப் பெறும் தலித் மக்கள் செய்த குற்றம் என்ன?ஒரு மூட்டை நெல் அறுப்பதற்குக் கூடுதலாக அரைப் படி நெல் கூலியாகக் கேட்டதுதான் அவர்கள் செய்த ‘மாபெரும் தவறு”! எனும் வரிகள் இன்னும் எமது தொண்டைகளை அடைத்துக் கொண்டிருக்கின்றன.

அந்த ஊருக்கு நான் அனுப்பித் தந்த வசந்தம் பார்த்து நினைவுகூர்தலுக்கு நன்றியைத் தெரிவித்திருக்கின்றார் அந்த ஊரைச் சேர்ந்தவர்! எமது மாவட்ட சோகத்தை முன்னிறுத்தி,அவர்களை நினைவுகூர்ந்த வசந்தத்துக்கு மிக்க நன்றிகள்..!

M.S. கதிரவன்
திருவாரூர் - தமிழகம்
.:.பர்வானியா - குவைத்

வசந்தம் ஏப்ரல் 2012 இதழ் கண்டேன்! கலவரங்கள் குறித்த

முகப்புக் கட்டுரை, மனிதநேயத்தின் மீதான உண்மை அக்கறை மற்றும் கலவரங்களைக் களையெடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து மிகவும் நடுநிலையோடு பேசியது.மீண்டும் ஒரு அழகிய கவித்தூறல், பத்திரிகைப் பூக்களுக்கு சமர்ப்பணமானது என்றால் அது மிகையல்ல!

இராமச்சந்திரன்
தொழுதூர் - திருச்சி
.:.பர்வானியா - குவைத்

வசந்தம் ஏப்ரல் 2012 இதழ்

கண்டேன்!யூஸுஃப் அலை அவர்களின் வரலாறு, மழலையருக்கு ஏற்ற வகையில் தருவது அழகு.அதேபோல் புதிய வலைகடல் பகுதி என்னைப் போன்று அடிக்கடி சமூக வலைதளங்களில் வளைய வர முடியாதோருக்கு வரப்பிரசாதம்!

.:.பாத்திமா ரிஹானா
கண்டி - இலங்கை
ஜிலீப் - குவைத்

.:.பேஸ்புக்கில்..!

facebook

அன்புள்ள வாசகர்களே! அனைவருடைய பெயர்களையும் இங்கு சேர்க்க பக்கங்கள் போதாததால்.., சிலரை மட்டுமே சேர்த்துள்ளோம்! அடுத்தடுத்த இதழ்களில் தொடருவோம்! தொடர்ந்து வசந்த முகநூல் வாசியுங்கள்!

@mohamad Rouf
@Hameed Ibrahim
@Akbar Ali
@Rasbudeen Mustafa
@ ARAbdurrahman
@ alms.azi
@ aaishamohd
@ abdul.basheed
@ Abdul Basith
@ Abdul Hakkim
@ Abdul Jaleel
@ Abdul Kader
@ Abdul Kaiyoom
@ Abdul Manaf
@ Abdul Miraj
இன்னும் பலர்..!

ட்விட்டரில்..!

twitter

தொடருவோர்..!
um abdullah@ BintMaryamansar
Salil Tripathi @saliltripathi
Oneindia Tamil @ thatsTamil
Tamil News Network @ tnnonline
இன்னும் பலர்..!

IPC தமிழ்ப் பிரிவு துரித அழைப்புக்கு..! HOTLINE: 97266683

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:4 6/12/12 12:25:12 PM

புகழ்ச்சி விறைப்பு..! மண் இறைப்பு.,!!

புகழுக்கு மயங்காதவர் உண்டோ பாரினில்..!புகழ்தலின் உச்சி இழுத்துச் செல்வதோ, வீழ்ச்சியின் அருகாமையில்..!தராதரமில்லா புகழ்ச்சி தள்ளுவதோ தரமில்லா சூழலில்..!! மானுட சமூகம் விழ வேண்டாம் இதன் கொடுந்தணலில்..!!

மனிதன் இயல்பாகவே, உணர்ச்சிவயப்படுபவன்..!ஆரம்பத்தில் அந்த அதீத உணர்வு அவனை ஊக்கப்படுத்தினாலும், அந்த உணர்ச்சி அவனை பெரும் கேட்டில் வீழச் செய்கின்றது என்பதுதான் உண்மை!அதுவும் ஒரு இறைநம்பிக்கையாளனைப் பொறுத்தவரை புகழ்ச்சியின் தாத்பர்யம் எந்நிலையிலும் அவனை தடம் புரளச் செய்துவிடக்கூடாது.

ஆனால், இன்றைய சூழலில் நடப்பது என்ன?

காரியம் ஆக வேண்டி காலைப் பிடிக்க முதலில் சம்பந்தப்பட்ட நபரை தலையில் தூக்கி ஆட வேண்டிய கட்டாயம்!தன் நிலையை தக்க வைத்துக்கொள்ள, தனது உண்மைத் தகுதியையும் அடகு வைத்து சரணடைய வேண்டிய நிலை..!

முடியாட்சி காலத்தில் மன்னரைப் புகழ்ந்து பாடி பரிசில்கள் பெற்ற புலவர்கள் இருந்தார்கள் என்றால், ஜனநாயக காலத்தில், சாதாரண குடும்பத் தலைவன்,அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் என்று ஆரம்பித்து,மக்கள் பிரதிநிதிகளும்,சமூக மக்களும் தத்தமது தலைவர்களை புகழ்ந்து தள்ளுவது இன்றும் நடக்கின்றது. என்ன ஒரே வித்தியாசம் என்றால், அந்த காலத்தில் ஓலைகளும் புலவர் வாய்களும் புகழ் பாடின என்றால், இன்று குடும்பத் தலைவர்களின் வாய்ச்சொல்லும்,பணியாளர்களின் மின்னஞ்சல்களும்,கூட்ட ஒலிப்பெருக்கிகளும், வண்ண டிஜிட்டல் பேனர்களும் இதனைச் செய்கின்றன.இந்த நிலைமை எந்த அளவுக்கு நீள்கின்றது என்றால், இறுதியில் இணை வைப்பு வரை கொண்டு சென்றுவிடுகின்றது.

பிறந்தநாள் வாழ்த்திலிருந்து ஆரம்பித்து நினைவுநாள் அஞ்சலிகள் வரை இது விதிவிலக்கின்றி தொடர்வது வேதனை.அண்மைக்காலங்களில் இதுபோன்ற சாத்தானிய செயல்களுக்கு ஒரே இறைவனை ஏற்றுக்கொண்டுள்ள முஸ்லிம்களும் பலியாவது வேதனை.

ஒரு சிலநேரங்களில், சம்பவங்களும் சொற்பிரயோகங்களும், ஒருவருடைய வாழ்வையே திசை திருப்பிவிடக்கூடும். உச்சிக்கு ஏற்றச் செய்யும் அந்த புகழ்ச்சியே சிலசமயம் ஒருவரை அதலபாதாளத்திலும் தள்ளிவிடக்கூடும்.உண்மையை உரைத்தால், புகழ்ச்சிகள் ஒருவருடைய உண்மை தோற்றங்களை மூடி மறைக்கத்தான் செய்கின்றன.சந்தனங்களாக எமது முகத்தில் பூசப்படுவதாக நாம் அறிய,உண்மையில் அவை சகதிகளாகத்தான் தென்படுகின்றன.சகதி எனும் இகழ்ச்சி தரும் வேதனையைவிட, புகழ்ச்சி தரும் போதை மிகக் கொடியது.இவை இரண்டுக்கும் இடைப்பட்ட நூலிழை இடைவெளியை நாம் உணர்ந்துகொள்ள மறந்துவிடுவதனால்தான் எல்லா குழப்பங்களும்..!

ஒருவேளை அதீதமாகப் புகழவும்,புகழ்தலுக்கு உரியவராகவும் இருக்க ஒரு மனிதருக்கு தகுதி இருக்கின்றது என்று சொன்னால், நிச்சயமாக அது தனது பெயரிலேயே புகழுக்குரியவர் என்று போற்றப்படும், இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களாகத்தான் இருக்க முடியும். ஆனால்,அந்த இறுதித்தூதரே இங்கு என்ன சொல்கின்றார் பாருங்கள்: புகழ்பவரைக் கண்டால் அவர்தம் முகத்தில் மண்ணை வாரித் தூற்றுங்கள்.

ஒவ்வொரு மனிதனும் வேறுபட்ட குணாதிசயங்களின்.., இயல்புகளின் கலவையாக இருக்கும்போது.., அவனுடைய சிறப்புத் தன்மைகளின் அடையாளங்கள் வெளிப்படும் முன்னரே புகழ்ச்சிகள் அவனுடைய ஆளுமையின் மாயத்தோற்றத்தை முன்வைக்கும் அபாயத்தை செய்துவிடுகின்றன. இந்த கோணத்தில் பார்த்தால், தன்னுடைய சுயஇலாபங்களுக்காக, தகுதியையும் மீறி பிறரைப் புகழும் ஒருவனே, புகழ்தலுக்கு உரியவரைவிடவும் மிக ஆபத்தானவன். அதனால்தான் அண்ணலார் (ஸல்) அவர்களும் புகழ்பவனைத்தான் முதலில் கண்டிக்கின்றார்கள்.

காரியம் ஆவதற்காக வேண்டியோ அல்லது காரியம் ஆனதற்காகவோ ஒருவன் சம்பந்தப்பட்ட நபரை புகழ்வது என்பது அவனது ஆளுமையைத்தான் குறைக்கச் செய்கின்றதே தவிர, புகழப்பட்ட நபர் தன்னை உயர்வாக நினைப்பான் என்பது அவனது தவறாக கணிப்பு!

எனவே, உண்மைப்
புகழ்ச்சியை அடையாளம்
காண்போம், போலிப்
புகழ்ச்சிகளை
கருவறுப்போம்!

ஏகஇறைவனே
அனைத்துக்கும் போதுமானவன்!!

மு.அ. அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw musavir2010@yahoo.com
http://ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்!



VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:5 6/12/12 12:25:13 PM

மு.அ.அப்துல் முஸவ்விர்



பெருகும் மருத்துவ செலவுகள்.!

"எப்படியாவது எம் புள்ள உயிரைக் காப்பாத்துங்கய்யா..!" - ஏழைத் தந்தையின் கெஞ்சல்!

"கவலைப்படாதேப்பா, ஒரு இரண்டு இலட்சத்தைக் கட்டிடு.சாயங்காலமே ஆபரேஷனை முடிச்சுடுவோம்!" - இது மருத்துவரின் விளக்கம்!

இயலாமைக்கும் சம்பாத்தியத்துக்குமிடையிலான இந்த முதல் காட்சியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது, அடுத்த காட்சி!

"எவ்வளவு செலவு ஆனாலும் கவலையில்லை.நோ ப்ராப்ளம்.எம் புள்ளய எப்படியாவது புழைக்க வைச்சுடுங்க!" இது பணக்காரத் தந்தையின் செல்வப் பாசம்! "நாங்க ட்ரை பண்றோம்!முடியலைனா, யு.எஸ்.-லேர்ந்து ஸ்பெஷலிஸ்ட் வரவைப்போம் சார். கவலைப்படாதீங்க!"-இது மருத்துவரின் ஆறுதல்.

மேற்சொன்ன காட்சிகள் ஒன்றேயானாலும், இரண்டுக்கும் மருத்துவ சிகிச்சைக்கான பின்னணியாக இருப்பது பணம்.., பணம் மட்டுமே..!

உணவே மருந்து மருந்தே உணவு என்றாக இருந்த நிலை மாறிப் போய், மருந்து இருந்தால்தான் உணவே உட்கொள்ள முடியும் எனும் நிலை வந்துவிட்டது.அதனடிப்படையில் சமையலும் மாறிவிட்டதால், நோய்களும் பெருகிவிட்டன.

நோய் அறியும் ஆழ்நுட்பங்களை வழிவழியாக அனுபவத்தில் கற்றுத் தேர்ந்த மருத்துவர்கள் தங்கள் மருத்துவ முறையில் உண்மையான நம்பிக்கையுடன் செயல்பட்ட நிலைக்கு பஞ்சம் வந்துவிட்டது.

வீடுகளில் பெரியவர்கள்-பெண்கள் தம் குடும்பத்தினருக்கு வரக்கூடிய நோய்களுக்கான மருந்துகளைத் தாமே செய்து கொள்ளும் ஆற்றல்-அறிவு உடையவராக இருந்தனர். தம்மால் முடியாத சூழலில்தான் ஊர் மருத்துவர் உதவியை நாடுவர்.அவ்வாறே நாடினாலும்,மருத்துவர் தரக்கூடிய சிறப்பு மருந்துகளைப் பயன்படுத்தத் தேவையான அறிவும் மக்களிடம் இருந்தது.

இதனால், மருந்துகளின் பக்க விளைவுகள் மற்றும் பாதிப்புக்கள் குறித்த அறிவும் மக்களிடையே இருக்கவும் செய்தது. உடலின் இயற்கையான அம்சங்களுக்குத் தகுந்த மருந்துகளை மருத்துவர்கள் தாமே தயாரித்து,சோதித்து அதன் பின்னரே மருந்தை வழங்குவர்.

அனைத்துக்கும் மேலாக, உடல்நலத்துடன் தொடர்புடைய வாழ்வுப் பிரச்னை என்பதால்,மருத்துவர்-பிணியாளர் என இருதரப்பாரும் சிகிச்சைகளையும், மருத்துவ முறைகளையும் இறையச்சத்தோடு கையாண்டனர்.

அதுமட்டுமல்ல!

மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடைப்பட்ட குடும்பரீதியான நட்பும்,சமூகப் பந்தமும் பரஸ்பர பகிர்ந்தளிப்பின் மூலம் பிண்ணிப் பிணைந்திருந்தது.

இது தவிர, இயற்கை வளங்களையும், வசதிகளையும் மக்கள் தடையின்றி முறையாகப் பயன்படுத்தியதால் அந்த வாழ்வாதாரங்களோடு இயைந்த மக்கள் வாழ்வும் மருந்துகளுக்கு ஒத்துப் போகும் வகையிலும், அந்த மருத்துவத்துக்கான சரக்குகள்கூட எளிதாகப் பெறும் வகையிலும் இருந்தன. மறுபுறம், இயற்கை வளங்களும் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆனால், இன்று வாழ்வாதாரங்கள்

ஆரோக்கியம் என்பது மனிதவாழ்வின் உன்னத கட்டாயம்! அதனைப் பேணிக் காப்பது என்பது ஒவ்வொரு மனிதரின் உரிமை சாசனம்!அதற்கும் இன்று சமூகம் விலை வைத்துவிட்டது என்பது வெட்ககரமான கொடுங்கோல் ஆசனம்!நிச்சயம் இதற்கு கட்டப்பட வேண்டும் சுருக்குக்கயிறு எனும் வாரணம்!!

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:6 6/12/12 12:25:17 PM

தவிக்கும் நடுத்தர குடும்பங்கள்..!!



பெரும்பாலும், மக்களின் அன்றாட வாழ்விலிருந்து புறந்தள்ளச் செய்யப்பட்டுவிட்டதால், நோய் நொடிகள் புதிதாய்ப் பிறக்க, அதற்கு நிவாரணம் பெற புதுப்புது மருத்துவ வகைகளும் கண்டுபிடிக்க வேண்டி இருந்தது. அந்த மருத்துவ முறைகளும், மக்களுடன் இணைந்த சூழல்களிலிருந்து வேறுபட்டு அவர்தம் மனநிலை, அறிவு முதலியனவற்றுக்கு மாற்றமாகவும், அவசரமும், அறியாமையும், குழப்பமும் நிறைந்த சூழலுக்காகவும் என்று மாறி நின்றன.விளைவு, பொருத்தமில்லாத தவறான பழக்க வழக்கங்கள் பெருகின.

உடல்நலத்துக்கு ஆதாரமாய் இருந்துவந்த இரவுத் தூக்கம், பசிக்கு உணவு, தாகத்துக்குத் தண்ணீர், தலைக்குக் குளியல், உடலியற்கைக்குப் பொருந்திய நல்லுணவு, கழிவுகளை வெளியேற்றுதல் இவையாவும் உரிய நேரத்தில் உரிய வகையில் இல்லாமற்போய் - எல்லாம் நேரம் கிடைத்தாலத்தான்-கடமைக்காக, எதுவானாலும் சரி என்றாகிப் போய்விட்டது!

இவையெல்லாவற்றையும் தாண்டி, மருத்துவம் என்பது கல்வி மூலம் என்கின்ற சாதனமாகிவிட்டதால், போட்டியை சமாளிக்க பல இலட்சங்கள் செலவு செய்து படிப்பை அடைந்து செலவு செய்த பணத்தையும் மீண்டும் பெற்றாக வேண்டியதும்,தங்களுடைய வாழ்வையும் கவனித்தாக வேண்டியும் அனைத்துக்கும் மேலாக மருத்துவத்துறை போட்டியை சமாளிக்க வேண்டியும் என்று பலப்பல கட்டயங்களுக்கு மருத்துவர்களும் தள்ளப்பட்டுவிட்டனர்.

உண்மையான சேவை மனப்பான்மையுடன் இணைந்த மருத்துவர்கள் இன்னும் இருந்தாலும், பொதுவாக மருத்துவத்துறையை எடுத்துக் கொண்டால் அதனை ஒரு 'தொழில்' Industry என்று வழக்கு சொல்லில் இணைத்துவிட்டது சமூகம். இதனால் வணிக நோக்கு பெருத்துவிட்டது. வணிகரீதியான அம்சங்கள் முன்னிலை பெருத்துவிட்டதால், புல்லுருவிகளும் முளைத்துவிடுவது இயல்பே.அத்தகைய புல்லுருவிகளுக்கும்,மக்களுக்கும் இடையில் எந்த ஒரு ஒட்டோ, உறவோ, அன்போ,பரஸ்பர

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:7 6/12/12 12:25:18 PM

மு.அ.அப்துல் முஸவ்விர்

பயமோ,பொறுப்போகூட இல்லாமற் போய்விட்டது. மருத்துவப் பிரிவுகள் பலவும் எந்தவொரு வேறுபாடுமின்றி மிகப் பெரும் அளவில், வணிக நோக்கில் செயல்பட ஆரம்பித்தன.

இதனால் என்ன நிகழ்கின்றது?அறிந்தோ, அறியாமலோ-நேரிடையாகவோ,மறைமுகமாகவோ மருந்துகளின் தரத்தையும், குணத்தையும், அளவையும் முடிவு செய்யும் காரணிகளாக வணிகத் தொழிலும் வணிகர்களும் அமைந்துவிடுகின்றார்கள்.

சரி!

இவ்வளவு செலவு செய்து உடல்நலத்துக்காக மெனக்கெட்டாலும், ஆரோக்கியம் கிடைக்கின்றதா?

இல்லையே..!ஆரோக்கியம் பெற்றாலும், மறுபுறம் வியாபாரத்துக்காக நீண்ட நாள் பாதுகாக்கவும், எளிய நடைமுறைகளுக்காகவும், பெருமளவில் உயிர்க் கொல்லிகள் பயன்படுத்தப்படுவதால்,உடலுக்கு மிகப் பெரிய கேடு ஏற்படுகின்றது. நவீனங்களின் மாறுதல்களுக்கு மருத்துவ துறையும் மருந்துகளும் தப்பவில்லை.பாட்டி வைத்தியத்தில் மண்குப்பிகளில் ஆரம்பித்த மருந்து தயாரிப்புக்கள், காலமாற்றத்துக்கு ஏற்ற வகையில் தற்போது எளிமை கருதி குப்பிகளில் அடைத்து விற்கப்படுகின்றது.இதனால், இயற்கை தந்த நல்லதொரு அமுதமாகிய உமிழ்நீர் எனும் என்ஸைம்-நொதி கலவாது வயிற்றுள் செல்லும் மருந்துகளும் விஷமாகின்றது.

மருந்துகளின் நிலைமை இப்படி என்றால், சிகிச்சை முறைகளுக்கான செலவுகள் குறித்தோ சொல்ல வேண்டியதில்லை.ஏழை மக்களுக்கும் மருத்துவம் தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக,மைய நடுவண் அரசும்,மாநில அரசுகளும் பல திட்டங்கள் வகுக்கின்றன என்பதற்கு மறுப்பு சொல்ல முடியாது.ஆனால், அரசியல் மாற்றங்கள்,அதிகார துஷ்பிரயோகங்கள் ஆகியன காலப் போக்கில் இத்திட்டங்களை விழலுக்கு இழைத்த நீராக்குகின்றன.அல்லது இதனால் பயன்பெறுவதில் வசதி படைத்தோரும் அடங்கிவிடுகின்றனர்.இதற்கும் மேலாக மருத்துவ திட்டங்கள் நிறைவேறாமல் போய், அதற்குரிய தொகைகள் திருப்பி அனுப்பப்படும் சூழலும் இங்கு நிலவுகின்றது.

சேவை மனப்பான்மையை முன்னிறுத்தி செயல்பட வேண்டிய மருத்துவ துறைகள் பங்கு வணிகத்தில் ஏற்றத் தாழ்வுகள் வரை பேசப்படும் கார்பொரேட் கம்பெனிகளாக மாறிவிட்டன.

கல்வி நிலையில் ஏற்றத்தாழ்வுகள் கூடாது என்பதற்காகத்தான் சீருடை என்றும், சமச்சீர் கல்வி என்றும் அரசுகள் அறிமுகப்படுத்துகின்றன. ஆனால், மருத்துவத்துறையை எடுத்துக் கொண்டால், ஐந்து நட்சத்திர வசதிகளுடனும், உயர்ரக மருத்துவ வசதிகளோடும் கட்டப்பட்டு வரும் மருத்துவமனைகளின் பயன்பாட்டுக்காக, இன்று இந்தியாவில் தங்கி மருத்துவ சிகிச்சை பெறும் மக்களுக்காக, சிகிச்சை முடிந்து ஒரு வாரம் வரை அரசு வழங்கும் சலுகைகளை நோயாளிகளும், அவருடன் உறவினர்களும் சேர்ந்து அனுபவிக்கும் திட்டங்களை வெளிநாட்டினருக்காக அரசாங்கம் நிதி ஒதுக்கவும் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சேவை மனப்பான்மையை முன்னிறுத்தி செயல்பட வேண்டிய மருத்துவ துறைகள் பங்கு வணிகத்தில் ஏற்றத் தாழ்வுகள் வரை பேசப்படும் கார்பொரேட் கம்பெனிகளாக மாறிவிட்டன.

2010-ஆம் ஆண்டில் மட்டும் நம் நாட்டின் தனியார் மருத்துவமனைகளின் ஒட்டுமொத்த இலாபம் என்ன தெரியுமா..? நெஞ்சை பிடித்துக் கொள்ளுங்கள்! 62,000 கோடி ரூபாய்!வரும் ஆண்டுகளில் இவை இரட்டிப்பாகிக் கொண்டே போகும் என்று சொல்லப்படுகின்றது.அதனால், தனியார் முதலீட்டு நிறுவனங்கள்

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:8 6/12/12 12:25:18 PM

பலவும் மருத்துவ துறையில் தங்கள் முதலை போட முண்டியடிக்கின்றன.

கடந்த ஆண்டுகளில் மட்டும் அமெரிக்கா மற்றும் அரபுநாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து சிகிச்சை பெற்றோர் மட்டும் சுமார் 1,50,000 பேர். இதனுடன் சுற்றுலாத் துறையும் இணைவதால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் வருமானம் கொழிக்கின்றது. இதனால் வருங்காலத்தில் மருத்துவ துறையில் நூறு சதவீத அந்நிய முதலீட்டுக்கு அனுமதி வழங்கப்படலாம்.

அதுமட்டுமல்ல, மருத்துவ காப்பீடு என்பது பெரும் கேலிக்குரிய அம்சமாகி வருகின்றது.நம் நாட்டின் மக்கள் தொகையில் 35%- மக்கள் வரைதான் மருத்துவ காப்பீடு வசதியைப் பெற முடிகின்றது.அப்படியே பெற்றாலும், காப்பீடு அட்டையைக் கொண்டு சிகிச்சை பெறும் நோயாளிகளை மருத்துவமனைகள் எப்படி நடத்துகின்றன என்பது வெளிப்படை.

இப்படி மருத்துவதுறை பணம் பிடுங்கும் துறையாக ஏன் மாறி வருகின்றது..? வெளிநாட்டு முறை மருத்துவ செயல்பாடுகள் எமது நாட்டுக்கு ஏற்புடையதா என்பதைப் பார்க்க வேண்டும்.மருத்துவப் பழக்கங்களில் அதிநுணுக்க முறை,மாறி வரும் தட்பவெப்ப நிலைகள் மற்றும் பூமி வெப்பமாதலால் ஏற்படும் இயல்பான உடலியல் நிகழ்வுகள் ஆகியவற்றைக்கூட ஒரு உயர்ரக மருத்துவ சிகிச்சை தேவைப்படும் அளவுக்கு பெருத்துக் காட்டுதல்,நோயாளிகள் மற்றும் அவர்தம் இரத்த சம்பந்தங்களின் பாசங்களை மருத்துவ இலாபங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் உளவியல் பாதிப்புக்களை உண்டுபண்ணுதல்,உணவு,உடை,இருப்பிடம் போன்ற அடிப்படை வசதிகளின் தேவை-Demand சுய இலாபங்களுக்காக ஏற்றி விடுவது போல், உயிர் தொடர்புடைய மருத்துவ துறையையும் பட்டியல் சேர்த்து ஒரு பொய்யான வலியை உருவாக்குதல்... என்பன போனற் அம்சங்கள் பாரம்பர்ய மற்றும் இயல்பான உளஅம்சங்கள் கொண்ட இந்தியர்களுக்கு தேவை இல்லாத விஷயங்களாகும்.

இன்னும் சொல்லப்போனால், கிராமப்புறங்களைவிட நகர்ப்புறங்களில்தான் சிக்கன்குன்யா,டெங்கு போன்ற நவீன நோய்கள் அதிகம் வருவதாகவும்,ஏறக்குறைய நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் 60% பேர் வரை உடனடி மருத்துவ அடிப்படை வசதிகள்கூட பெற முடியாத நிலையில் இருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதுவே இப்படி என்றால், முதியோர் மற்றும் நாட்டு மூத்த குடிமக்களின் நிலையை சொல்ல வேண்டியதில்லை.

இந்த அனைத்து வகுப்பு மக்கள் மத்தியில் அதிகம் பாதிப்புக்குள்ளாவது நடுத்தர வகுப்பினரே என்பதை மறுக்க முடியாது.

அடுத்த இதழில்.., இறைநாடின்..!

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:9 6/12/12 12:25:18 PM

ஏ.பி.எம். இத்ரீஸ்

நபி மருத்துவம்:

நோய் தடுப்பு முறைக்கு வழிச்சாதனம்!

மனிதனை முடக்கிவிடும் அளவுக்கு கொடுமையானது நோய்கள்!அவற்றை எதிர்கொள்ளும்போது தாங்கும் ஆற்றலையும்,வராமல் தடுக்கும் வழிமுறைகளையும் வழங்குவது நோய் தடுப்பு முறைகள்!அத்தகைய ஆற்றலைத் தரும் மருத்துவ முறையை வழங்கியிருக்கின்றார்கள் நமது நபிகள்!

வருமுன் காக்கும் நோய்த்தடுப்பு மருத்துவ விஞ்ஞானத்திலும் நபிகள் மிக உயர்ந்த சிந்தனைகளை நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். தொற்று நோய் மற்றும் பிற நோய்களுக்கு எதிராக முதலாவதாக எடுக்க வேண்டிய தற்காப்பு மருத்துவ முறைகளைப் பற்றியும் நபிகள் (ஸல்) கூறியுள்ளார்கள்.

ஜாபிர் இப்னு அப்துல்லா எனும் நபித்தோழர், தக்கீப் தூதுக்கோஷ்டியுடன் இருந்தார். அங்கே ஒரு குஷ்ட நோயாளியும் இருந்தார். நபிகள் அவரிடம் ஒரு தூதனுப்பி நாம் உமது சத்தியப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டோம். நீங்கள் திரும்பிச் சென்றுவிடுங்கள் என்று கனிவுடன் கூறினார்.

மற்றொரு தடவை "ஆரோக்கியமாக வாழ்பவருக்கு மத்தியில் நோயாளியை வரவழைக்க வேண்டாம்" என்றும் நபிகள் கூறுகின்றார்.

கொள்ளை நோய் பற்றியும் நபிமொழிகள் வந்துள்ளன. ஒரு பிரதேசத்தில் கொள்ளை நோய் இருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அங்கே செல்லாதீர்கள். நீங்கள் இருக்கும் பிரதேசத்தில் கொள்ளை நோய் பரவிவிட்டால் அங்கிருந்து வேறிடத்திற்குச் சென்றுவிடாதீர்கள். (ஆதாரம்:புகாரி,முஸ்லிம்)
இஸ்லாமிய வரலாற்று நூல்களில் இது தொடர்பாக பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது இன்று மருத்துவத்தில் கான்டைனா என்று அழைக்கப்படுகின்றது. அதாவது கொலரா, தைபோயிட், குஷ்டம் போன்ற தொற்று நோய்கள் அடிக்கடி பரவும் இடங்களை விட்டு மக்களை அப்புறப்படுத்தி வைத்தல். தொற்று நோய் உள்ள இடங்களுக்கு மக்கள் செல்வதை தடுப்பதைப் போல அவ்விடங்களில் இருந்து மக்கள் வெளியேறுவதை தடுப்பது நோயைக் கட்டுப்படுத்தவும் வேறிடங்களுக்கு பரவாமல் தடுக்கவும் உதவுகின்றது. இன்று மேற்கொள்ளப்படுகின்ற முதலுதவி நடவடிக்கையைப் போல மனிதப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல் ஒரு நல்ல வினைத்திறனுள்ள தற்காப்பு நடவடிக்கையே என்பதில் சந்தேகமில்லை.

நபிகளின் மற்றொரு நோய்த்தடுப்பு முறை பற்றி முஸ்னத் அல்பஸ்ஸாரில் பின்வரும் நபிமொழி பதிவாகியுள்ளது. "அல்லாஹ் சிறந்தவன். அவன் சிறந்ததையே விரும்புகின்றான். அவன் தூய்மையானவன். அவன் தூய்மையையே விரும்புகின்றான். அவன் செல்வந்தன். அவன் கொடை கொடுப்பதையே விரும்புகின்றான். நீங்கள் உங்கள் வீட்டு முற்றங்களை சுத்தம் செய்யுங்கள். தோட்டங்களைத் துப்பரவு செய்யுங்கள். யூதர்களைப் போன்று வாழாதீர்கள். ஒவ்வொரு முஸ்லிமும் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய ஒரு கடமை இருக்கின்றது. அதுதான் ஒவ்வொரு நாளும் குளிப்பதாகும்" என்று நபிகள் கூறுகின்றார்.

வீட்டில் குப்பை கூளங்கள் பெருகும்போது பூச்சிபுழுக்களும் நோய்க்கிருமிகளும் பெருகுவதற்கு அது காரணமாக அமைந்துவிடுகிறது. இது பல வியாதிகளையும் தொற்று நோய்களையும் ஆரோக்கியமாக இருக்கும் மனிதர்களுக்கு ஏற்படுத்திவிடுகிறது.நீர் நிலையில், இளைப்பாறும் மரநிழலில், வீதியோரங்களில் மலஜலம் கழிப்பதை நபிகள் தடுத்துள்ளார்கள்.
இது நோய்கள் பரவாமல் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல் அவசியம் என்பதை

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:10 6/12/12 12:25:18 PM

வலியுறுத்துகின்றது.

இவை எல்லாவற்றிலும் வீட்டுச் சுத்தமே மிக முக்கியமானதாகும். ஏனெனில் பெரும்பகுதி நேரத்தை நாம் வீட்டிலேயே கழிக்கின்றோம். உணவு, உறக்கம், ஓய்வு என பெரும்பாலான நேரங்கள் வீட்டிலேயே கழிகின்றது.

ஆரோக்கியமான வசிப்பிடத்தைப் பற்றி சுகாதார ஆய்வாளர்கள் கூறியுள்ள கருத்துக்களுக்கு எந்த வகையிலும் குறையாதவாறு நபிகளின் அறிவுறுத்தல்கள் அமைந்துள்ளன. இவை யாவும் வரும் முன் நோயைத் தடுத்துக் கொள்வதற்கான நபிகளின் மருத்துவத்தில் காணப்படும் முன்னேற்பாடுகளே என்றால் மிகையாகாது.

இஸ்லாம் தனிமனித சுத்தத்தில் பெரும் கவனத்தை செலுத்தியுள்ளது. இஸ்லாத்தில் சுத்தம் நம்பிக்கையின் ஓர் அம்சமாக ஆக்கப்பட்டுள்ளது.நோய்களிலிருந்து மனித ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான அடிப்படை தூய்மையேயாகும். இந்த வகையில் ஒளு மிகப்பெரிய பங்கு வகிக்கின்றது.

உலக சுகாதார நிறுவனம் பங்களாதேஷில் மேற்கொண்ட ஆய்வின்படி கைகளைக் கழுவுதற்கு சுத்தமான நீரைப் பயன்படுத்துவதால் மட்டும் 90 சதவீத நுண்கிருமிகள் நீக்கப்பட்டு விடுகின்றன என்று கூறுகின்றது. ஜனாபத், கைல், நிபாஸ் ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தினத்திலும் பெருநாள் தினங்கள் போன்றவற்றிலும் குளிப்பதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது.

நபிகள் தலைமுடியை சுத்தமாக வைத்திருப்பதை அதை சீர்படுத்தி வாருவதை, அதற்கு எண்ணையிடுவதை அறிவுறுத்தியுள்ளார்கள். இந்த விஷயத்தில் தனது தோழர்களுக்கு நபிகள் (ஸல்) அவர்கள் முன்மாதிரியாகவும் திகழ்ந்தார்கள். நீண்ட நகக்கண்களில் ஷைத்தான் ஒளிந்திருப்பதாகக் கூறி நகங்களை வெட்டும்படி பணித்துள்ளார்கள். நகஇடுக்குகளில் பல நோய்க்கிருமிகள் இருப்பதாக இன்று ஆய்வுகள் உறுதிப் படுத்தியுள்ளன. உணவு உண்ணும் போது அக்கிருமிகள் உடலினுள் சென்று விடுகின்றன. எக்ஸியோர்ஸ் நோய்கள், கைகள் மூலமாகவே பரவுகின்றன.

மலஜலம் கழித்த பின் கையைக் கழுவாது போனால் பல தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. எனவே நபிகள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: “உண்பதற்கு முன்பும் உணவு உண்ட பின்பும் கையைக் கழுவுபவரின் உணவில் ஆரோக்கியமும் அபிவிருத்தியும் உண்டு!”. உறங்கி எழுந்த பின் கையை கழுவும்படியும் நபிகள் (ஸல்) தனது தோழர்களுக்குக் கூறினார். “ஏனெனில் உறங்கும் போது கைகள் எங்கே உறங்கின என்பது யாருக்கும் தெரியாது” என்றும் நபிகள் கூறினார்.

ஷஅத் இப்னு அஜ்ரா கூறுவதைப் பாருங்கள்: “எனது தலை சொரிய ஆரம்பித்தது. கடுமையான வலி எடுத்தது. நான் நபிகளிடம் சென்றேன். எனது முகத்தில் பேன்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. இதைப்பார்த்த நபிகள் “உன்னைப் போன்ற ஒருவரை இதுவரை நான் கண்டதே கிடையாது. உனது தலைமுடியை சிரைத்துவிடுவீராக!” என்று கூறினார். இதனால்தான் நபிகளார் (ஸல்) அவர்கள் ஜாஃபரின் பிள்ளைகளின் தலைமுடிகளை சிரைக்கும்படி கட்டளையிட்டார். சிரைத்த தலையின் மீது நபிகள் மருந்திட்டு சிகிச்சை செய்தார். இன்றும் கூட வைத்தியர்கள் பேன், பொடுகுக்கான மிகச்சிறந்த தீர்வாக முடிவெட்டும்படியே அறிவுறுத்துகின்றனர். அப்போதுதான் பேன்களும் அவற்றின் இனப்பெருக்கமும் முற்றாக அழிக்கப்பட வாய்ப்புள்ளது.

பானங்களை அருந்தும்போது பாத்திரத்தில் மூச்சுவிட வேண்டாம் என்றும் நபிகள் கூறுகிறார். அதாவது பாத்திரத்திற்கும் வாய்க்கும் இடையில் இடைவெளி இருக்க வேண்டும் என்பது இதன் கருத்தாகும். தண்ணீர்ப் பாத்திரங்களை மூடிவையுங்கள், துருத்திகளை கட்டிவையுங்கள் என்று மற்றொரு இடத்தில் கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட நபிமொழிகளிலிருந்து நாம் பின்வரும் முடிவுகளுக்கு வரலாம். அதாவது தனிமனிதத் தூய்மை, சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருத்தல் போன்றவை மனிதனுக்கு வரக்கூடிய பல்வேறு நோய்களிலிருந்து தடுத்துவிட முடியும் என்பதை நபிகள் (ஸல்) இதன் மூலம் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

தொடர்ச்சி 13-ஆம் பக்கம்

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:11 6/12/12 12:25:19 PM

கேதான்

இஸ்லாமிய நிலைய கேதான் மகளிர் கிளை சார்பாக நடந்த சுற்றுலாவின்போது..!

சால்மியா

இஸ்லாமிய நிலைய சால்மியா மகளிர் கிளை சார்பாக இனிய சுற்றுலா நடந்தேறியது.ஸபாஹியா -இல் நடந்த இந்த சுற்றுலாவில் புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய பல்வேறு நாடு-மொழிகளைச் சேர்ந்த, இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய ஐம்பதுக்கும் மேற்பட்ட சகோதரிகளும் கிளை அழைப்புப்பணி சகோதரிகளும் கலந்துகொண்டனர்.

ஜஹ்ரா

இஸ்லாமிய நிலைய ஜஹ்ரா மகளிர் கிளை உடன் இணைந்து இந்திய மற்றும் ஃபிலிப்பின் சார்ந்த மகளிருக்காக சிறப்புக் கருத்தரங்கை நடத்தியபோது..!

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:12 6/12/12 12:25:19 PM

11-ஆம் பக்க தொடர்ச்சி

தனிமனித ஆரோக்கியத்தின் அடுத்த அலகுதான் வாய்ச்சுத்தமாகும். இன்று பல மருத்துவர்கள் கூறும் கருத்துக்களுக்கும் நபிகளின் கருத்துக்களுக்கும் இடையில் எந்த பெரிய வித்தியாசமும் கிடையாது. மனிதனின் வாய், உணவு உண்ணவும் பானங்களை அருந்தவும் இயற்கையாய் அமைந்த நுழைவாயிலாகும். மனித ஆரோக்கியம் பற்களின் ஆரோக்கியத்திலேயே தங்கியுள்ளது. அதேநேரம் வாய், நுண்கிருமி களிலிருந்து தப்புவது கடினம் என்பது நவீன மருத்துவ ஆய்வாகும். உண்ணும்போது எஞ்சிய உணவுப் பருக்கைகள் பற்சுகாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன பற்சுகாதார பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மருத்துவர்கள் அனைவரும் இறுதியாக கூறும் ஆலோசனையும் தீர்வும் பற்களைச் சுத்தமாக வைத்திருப்பதும் பற்குச்சியைப் பயன்படுத்தி பல்துலக்குவதும்தான்! இது நபிகள் அறிமுகப்படுத்தும் மிஸ்வாக்கிற்கு பதிலீடாக அமைகின்றது.

“எனது சமூகத்திற்கு சிரம்ம் இல்லாதிருப்பின் ஒவ்வொரு நாளும் ஐவேளை மிஸ்வாக் தூரிகை மூலம் பல்துலக்குவதை கட்டாயமாக் கியிருப்பேன்” என்று நபிகள் கூறுகின்றார். பல்துலக்குவது வாயைச் சுத்தப் படுத்துகின்றது. இறைதிருப்தியை பெற்றுத் தருகின்றது என்றும் நபிகள் (ஸல்) கூறுகின்றார். "நபிகள் (ஸல்) வீட்டுக்கு வந்து சேர்ந்தால் முதலில் பல்துலக்குவார்கள். நபிகள் (ஸல்) மரணிப்பதற்கு சற்று முன்பும் பல் துலக்கினார்" என்று அவரது மனைவி ஆயிஷா (ரலி) கூறுகின்றார்.



உணவை மென்று சாப்பிடுவதில் பற்களின் பணி மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. வாயில் காணப்படும் என்சைம்-நொதிகள், உணவு ஜீரண தொழிற்பாட்டில் உதவுவதற்கு உணவு மெல்லப்படும்போது உணவுக்கவளத்துடன் கலப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இச்செயற்பாடு இல்லாவிட்டால் குடல் அதன் தொழிற்பாட்டை செய்வதற்கு மிகவும் சிரமப்படலாம். இதனால் அஜீரணம், வயிறு பெருத்தல் போன்ற பல கோளாறுகள் ஏற்படலாம். எனவே பற்கள் நோயால் பாதிக்கப்படும்போது நுரையீரல், கண்கள், மூட்டுக்கள் தொடர்பான பல நோய்கள் ஏற்படுவதற்கு வழியேற்படுத்தி கொடுத்து விடுகின் றன. பற்களில் இருக்கும் நுண் கிருமிகளும் நச்சுப் பொருட்களும் குருதி மூலம் உடலின் ஏனைய உறுப்புக்களுக்கும் பரவக் கூடிய சாத்தியம் உண்டு என்று இன்றைய மருத்துவ உலகம் கண்டுபிடித்துள்ளது.

பூரண ஆரோக்கியத்திலேயே ஆரோக்கியம் இருப்பதை நபிகள் (ஸல்) தெளிவுபடுத்துகின்றார்.

அவ்வாறே நபிகள் (ஸல்) அவர்கள் இருதயத்தை பலவீனப்படுத்தும் 'இன்டயஜ ஸன்' நோயைப் பற்றியும் எச்சரித் துள்ளார் கள். இந்நோய்க்கும் உடல் பருமன், தொந்தி, சர்க்கரை வியாதிகளுக்கும் தொடர்பிருப்பதாக சமகால மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இருதய நோய்கள், குருதிக்குழாயோடு தொடர்புடைய நோய்கள், மூட்டு நோய்கள் ஆகிய அனைத்தும் இதனுடன் தொடர்பு படுகின்றன.

இதனுடன் அதிக தொடர்புடைய உடற்பகுதி வயிறு! “மனிதனின் வயிற்றைவிட மிக மோசமான பாத்திரம் ஒன்று கிடையாது. ஆதத்துடைய மகன் சில கவளங்கள் அவனது முள்ளந்தண்டை நிமிர்த்திவிடும் என்று கருதுகிறான். அது அவசியம் என்றால் மூன்றிலொரு பங்கு அவனது உணவுக்கானது (திடம்). இன்னொரு மூன்றிலொரு பங்கு அவனது குடிபானத்துக்கானது (திரவம்). மீதமுள்ள மூன்றிலொரு பங்கு அவனது சுவாசத்திற்கானது (வாயு)” என்று நபிகள் (ஸல்) கூறுகின்றார்.

நபிகள் (ஸல்) சாப்பிடாமல் உறங்குவதையும் தடுத்துள்ளார். அவ்வாறே சாப்பிட்டவுடன் உறங்குவதையும் தடுத்துள்ளார் என்று அபூநாசம் கூறுகின்றார்.

பொதுவாக வயதானவர்களும் குறிப்பாக இருதய நோயாளிகளும் சாப்பிட்டவுடனே உறங்குவதாலேயே மாரடைப்புக்கு உட்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. பூரண ஆரோக்கியத்திலேயே ஆரோக்கியம் இருப்பதை நபிகள் (ஸல்) தெளிவுபடுத்துகின்றார்.

இத்தகைய ஆரோக்கியத்துக்காக இறைவனிடம் பிரார்த்திக்கும்படி கூறுகின்றார். “அல்லாஹ்விடம் உறுதியையும் ஆரோக்கியத்தையும் கேளுங்கள்.ஆரோக்கியத்தை விட மிகச்சிறந்தது வேறொன்றும் கிடையாது!”

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:13 6/12/12 12:25:19 PM

ஆரோக்கிய உணவுப் பொருட்கள்

கருஞ்சீரகம்
நினைவாற்றல் பெருகிட,சர்க்கரை வியாதி நீங்கிட..!மேலும், அதிகாலை நேரத்தில் வெறும் வயிற்றில் பத்துப் பதினைந்து கருஞ்சீரக விதைகளை மென்று தின்று வந்தால் நினைவாற்றல் பெருகும். ஆனால்,கர்ப்பிணிப் பெண்கள் இதனை உபயோகிக்க கூடாது.

அரிசி.. இந்திரிய உற்பத்திக்கு..!
“அரிசி உணவு பரக்கத் பெற்ற உணவாகும். ஆதலால் அதை உண்ணுங்கள்” என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

இறைச்சி.. உடல் அழகு பெற.., உடல் சதைபோட..!
“இறைச்சி இவ்வுலக மக்களுக்கும், நாளைய சுவனவாசிகளுக்கும் சிறந்த உணவாகும்.இறைச்சி உண்ணுங்கள். அதனால் உடல் வளர்ச்சியடைந்து அழகு பெறும். மேலும், மேனியின் நிறமும் மினுமினுப்பாகவும் இருக்கும்.இதை உண்ணுவதால் உள்ளத்திற்கு ஆனந்தமேற்படுகிறது” என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்.

மீன்.. உடல் கொழுத்திட..!

முள்ளங்கி... பசி உண்டாக.., கிட்னியில் சேரும் கற்களைக் கரைக்க, முடி உதிர்வதைத் தடுக்க.., நரம்புத் தளர்ச்சியைப் போக்க..!



வெள்ளரிக்காய்.. உடல் பருமனாக..,
ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “நான் மிகவும் ஒல்லியாக இருந்தேன். நான் சதைபோட வேண்டும் என்பதற்காக எனக்கு என்னுடைய தாயார் பல மருந்துகளையும் செய்து பார்த்தார்கள். பலவிதமான பொருட்களை உண்ணக்கொடுத்தார்கள். அப்போதும் எனது உடலில் சதை பிடிப்பு ஏற்படவில்லை. பின்பு பேரீத்தம் பழத்தையும், வெள்ளரிக்காயையும் சேர்த்து எனக்கு உண்ணக் கொடுத்தார்கள். அதனால் சில நாட்களில் நான் பருமனாகி விட்டேன். (பொதுவாக ஒல்லியாக உள்ள பெண்கள் சதைபோட இது சிறந்த உணவாகும்)

பேரீத்தம்பழம்.. விஷம் குணமாக.., வாயுத்தொல்லை நீங்க.,!
நபிகள் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்: அஜ்வா பேரீசத்தம்பழம் சுவனத்துப் பழமாகும்.

ஜைத்தூன்... வலி, வாதம், வீக்கம், இடுப்பு வலி, முதுகுவலி, கைகால் குடைச்சல், மூட்டுக்களில் வலி குணமாக.., இரத்த ஓட்டம் சீராக.!

அத்திப்பழம்... உடல் அழகு பெற..,உடலை அழகாகவும், மினுமினுப்பாகவும், இளமையாகவும் வைத்திருக்க..!மேலும், அதிகாலையில் வெறும் வயிற்றில் அத்திப்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் உடல் அழகும், இளமையும் நாளுக்கு நாள் அதிகமாகும் என்று அரபிய மருத்துவர்கள் கூறுகிறார்கள்.



தர்பூசணிப் பழம்.. கர்ப்பிணிப் பெண்கள் இந்தப் பழத்தை அதிகமாக சாப்பிட்டு வந்தால் பிறக்கும் குழந்தை அழகாகவும், புஷ்டியாகவும் இருக்கும்.இந்தப்பழம் பசி தீர்க்கும் உணவும், தாகம் தீர்க்கும் தண்ணீருமாகும். மூளைக்கு குளிர்ச்சியை கொடுத்து அதை பலப்படுத்தும்..

நன்றி: ஸினூஃபா அன்ஸார்-http://ipcblogger.net/zinoofa/ சவுந்தர்ய முத்திரை

60% இந்தியர்கள் அசைவப் பிரியர்கள்

31% இந்தியர்கள் சைவப் பிரியர்கள்

34% இந்திய மகளிர் சைவம் உண்பவர்கள்

3% முஸ்லிம்கள் சைவப் பிரியர்கள்

73% இந்தியர்கள், அரசாங்கம் மதுவைத் தடை செய்ய வேண்டும் என்பவர்கள்

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:14 6/12/12 12:25:19 PM

விலக்கப்பட்ட (ஹராமான) உணவு வகைகள்,உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் பதப்படுத்தப்பட்டு வைக்கப்பட்ட துரித உணவுகள் மற்றும் மென்குளிர்பானங்கள் தவிர்ப்பீர்..!

நல்லுணவுத் தட்டு..!

இந்த நல்லுணவுத் தட்டின்படி உங்கள் உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொள்ளுங்கள்.எந்த உணவு உங்களுக்கு எவ்வளவு தேவை என்பதை இது காட்டுகின்றது.,!



7.6 %
துரித உணவு களுக்காக இந்தியர்களின் செலவு வளர்ச்சி வீதம் 2008 -2010-இல்

துரித உணவு தரும் துக்ககர விளைவுகள்

9.9 % ஆண்கள் மற்றும் 12.2 % பெண்கள் மேலதிக எடை உடையவர்கள்

30 % பேருக்கு பற்கள் மோசமாக இருக்கின்றது.

11.8 % ஆண்களும், பெண்களில் 10.8 சதவீதத்தினரும் சர்க்கரை தொடர்பான நோய் கொண்டவர்கள்.

33.2 % ஆண்களும், 31.7 % பெண்களும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை தொடர்பான நோய் கொண்டவர்கள்.

புள்ளிவிவர ஆதாரம்:WHO அறிக்கைகள்

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:15 6/12/12 12:25:22 PM

தேன் உணவும் அதுவே..! மருந்தும் அதுவே..!!

"தேவாமிர்தம் எல்லோருக்கும் ருசிக்கக் கிடைக்காது. அதனால், இயற்கை நமக்குத் தந்த அற்புதமான உணவுப் பொருள்தான் தேன்..! உணவும் அதுவே...! மருந்தும் அதுவே!! கார்போஹைட்ரேட், கால்சியம், இரும்பு, புரதம், மெக்னீஷியம், வைட்டமின்கள்... எனப் பல்வேறு சத்துக்களைக் கொண்டது தேன்..!!

பாப்பா முதல் தாத்தா வரை எல்லோரும் தேனை உட்கொள்ளலாம்..!!

ஆனால், குழந்தைப் பருவத்தில் மிகக் குறைந்த அளவே - அதுவும் அவசியம் ஏற்பட்டால் மட்டுமே கொடுக்க வேண்டும். ஐந்து வயதுக்குப் பிறகு ஆரோக்கியமான உடல் நிலையில் இருப்பவர்கள் தினமும் 10 முதல் 15 மி.லி. தேன் சாப்பிடலாம். தேன் உண்டால், உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும். சருமம் பொலிவு பெறும். குரல் வளம் பெறும். ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கும். உள்ளுக்குள் சாப்பிடுவது, மேற்பூச்சாகப் பூசிக்கொள்வது என இரண்டு வகைகளிலும் தேனைப் பயன்படுத்தலாம். கை கால்களில் அடிபட்டு வீக்கமாக இருந்தால், பச்சை முருங்கைப் பட்டை அல்லது காய்ந்த முருங்கைப் பட்டையை இடித்துச் சாறு எடுத்துத் தேனுடன் கலந்து சுடவைத்து, அடிபட்ட இடத்தில் ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து பற்றுப் போட்டு வந்தால் குணம் கிடைக்கும். தேள், பூரான் போன்ற விஷ ஜந்துக்கள் கடித்துவிட்டால், அந்த இடத்தில் தேனைத் தடவும்போது கடுகடுப்புக் குறையும். பிறகு மருத்துவரிடம் சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளலாம்.

எலுமிச்சைச் சாறுடன் சிறிது தேனைக் கலந்து மூன்று நாட்கள் குடித்துவந்தால், வாய்ப் புண்கள் குணமாகும். விதை நீக்கிய

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:16 6/12/12 12:25:25 PM

பேரீச்சையைத் தேனில் ஊறவைத்துத் தினமும் சாப்பிட்டு வந்தால், ஆண்மை அதிகரிக்கும்.

அரிசித் திப்பிலியைப் பொடிசெய்து, தேனில் கலந்து, காலையிலும் இரவிலும் ஒரு டீஸ்பூன் அளவு மூன்று நாட்களுக்குச் சாப்பிட, வறட்டு இருமல் குணமாகும்.

நாவல் பழக் கொட்டையை நன்றாகக் காயவைத்துப் பொடி செய்து தேனில் மூன்று நாட்களுக்கு ஊறவைத்து, சர்க்கரை நோய் உள்ளவர்கள் ஒரு டீஸ்பூன் அளவுக்குத் தினமும் மதியச் சாப்பாட்டுக்கு அரை மணி நேரம் முன்பாகச் சாப்பிட்டு வர வேண்டும். இப்படி 48 நாட்களுக்குச் சாப்பிட்டுவர, இன்சுலின் சுரப்பு அதிகரித்து சர்க்கரை நோய் கட்டுப்படும்.

சிலருக்கு எதைச் சாப்பிட்டாலும் சரியான ருசி உணர்வு தெரியாது. ஜாதிக்காய், மாசிக்காய் ஆகியவற்றைத் தூள் செய்து, தேனில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்துத் தினமும் ஒரு டீஸ்பூன் சாப்பிட, நாவில் உள்ள சுவை நரம்புகள் தூண்டப்பட்டு நன்றாகச் சுவையை உணர முடியும்.

சிறிதளவு கருந்துளசியையும் மிளகையும் இடித்து இரண்டு மணி நேரம் தேனில் ஊறவைக்கவும். இதில், ஒரு டீஸ்பூன் அளவுக்குத் தினமும் மூன்று வேளை சாப்பிட்டு வர, சளியினால் வரும் ஜுரம் சரியாகும். தோல் நீக்கிய பாதாமைத் தேனில் ஊறவைத்துத் தினமும் சாப்பிட்டுவந்தால், உடல் சோர்வு, அசதி நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகும்.

ஒரு கப் வெதுவெதுப்பான தண்ணீரில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து தினமும் மூன்று வேளை குடித்து வர, ஆஸ்துமா, சளி, மூச்சிரைப்பு குணப்படும். இரவில் தூக்கம் வராமல் தவிப்பவர்கள் வெதுவெதுப்பான நீரில் சிறிது தேன் கலந்து குடித்தால், நிம்மதியான உறக்கம் கிடைக்கும். பொதுவாக, சூட்டை அதிகப்படுத்தும் என்பதால், உடல் சூடு அதிகமாக இருப்பவர்கள் எப்போதாவது மட்டுமே தேன் சாப்பிட வேண்டும். தேன், முடியின் மீது பட்டால் நரைத்துவிடும் என்பார்கள். அது தவறான கருத்து. முடியின் மீது தேன் படும்போது, முடியில் உள்ள மெலனின் நிறமியின் அளவு சற்றுக் குறைந்து லேசாக செம்பட்டை நிறத்தில் தோன்றும். ஆனால், வெளியில் செல்லும்போது சூரிய ஒளியில் உள்ள 'வைட்டமின் டி' முடியின் மீது படுவதால், இரண்டு நாட்களிலேயே கேசம் இயல்பான கருப்பு நிறத்துக்கு மாறிவிடும்.

அதேபோல வெந்நீரில் தேன் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்தால், உடல் இளைக்கும் என்பார்கள். இப்படிச் சாப்பிடுவதால், உடலில் உள்ள தேவையற்றக் கழிவுகள் வெளியேற்றப்படும். ஓரளவு உடல் எடை குறையும் வாய்ப்பும் உண்டு. வெந்நீரில் தேனுடன் சிறிதளவு இஞ்சிச் சாறு கலந்து குடித்தால் இன்னும் கூடுதல் பலன் கிடைக்கும்.

ஆனால், ஒன்று முக்கியம்... நீங்கள் பயன்படுத்தும் தேன் சுத்தமானதாக இருந்தால் மட்டுமே, மேற்கண்ட பலன்கள் கிடைக்கும்!''

ஆனால், ஒன்று முக்கியம்... நீங்கள் பயன்படுத்தும் தேன் சுத்தமானதாக இருந்தால் மட்டுமே, பலன்கள் கிடைக்கும்!'''

1992 2012

இக்ர:். இஸ்லாமிய சங்கத்தின்

20ஆம் ஆண்டு நிறைவு விழாவும் கண்காட்சியும்

காலம்: 1- 2 ஜூன் 2012 (வெள்ளி - சனி) பி.ப 4 : 30 - 9 : 00

இடம்: மஸ்ஜித் கபீர் வளாகம்

கலாநிதி. ஆதில் அல்பலாஹ், முதன்மைச் செயளர், அவ்காப் அமைச்சு - குவைத்

சட்டத்தரணி ஜனாப் ரவூப் ஹகீம் கௌரவ நீதி அமைச்சர் ஸ்ரீ லங்கா

அஷ்ஷெய்க் ரவூப் ஸெய்ன் M.A. நளீமி பிரதம ஆசிரியர் 'சர்வதேசப் பார்வை'

திரு. C. A. H. M. விஜேரத்ன மேதகு இலங்கைத் தூதுவர் குவைத்

விசேட உரைகள் | சிறப்பு மலர் வெளியீடு | இணையதள அங்குராப்பணம் | கேள்வி பதிலும் பரிசில்களும்

வாழ்த்துரைகள் | காணொளிக் காட்சி | அன்பளிப்புக்கள்

கௌரவித்தல் நிகழ்ச்சி | மற்றும் பல. . .

விஷேட ஏற்பாடுகள்: பெண்களுக்கு பிரத்தியேக வசதிகள் | சிறார்களுக்கு பொழுது போக்கு வசதி | இரவு உணவு ஏற்பாடு | விஷேட போக்கு வரத்து வசதிகள்

(பஸ் புறப்படுமிடங்கள்: ஜஹ்ரா: IPC நிலையம், அம்கரா கேம்ப், ஜலீப் : கல்ப் மார்ட் முன்னால், கைதான்: K-Tic தமிழ் மஸ்ஜித், பாஹில் : லக்பிம ஹோட்டல், வேறு சில இடங்கள். . .)

அனைவரும் வருக..!

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:17 6/12/12 12:25:25 PM

அபூ அப்துல்லாஹ் முஹமது யூசுஃப் இப்னு நூர் அஹமது சலஃபி

"ஹிஜாமா" மருத்துவம்..! நிவாரணத்துக்கு உத்தரவாதம்..!!

மருத்துவம் பல உண்டு அறிவியல் உபயத்தால்..!உறிஞ்சும் வகை நிவாரண மருத்துவம் ஒன்றுண்டு, முஹம்மத் (ஸல்) அவர்கள் வழிமுறையால்..!நவீன மருத்துவத்திலும் இல்லை இத்தகு குணம், இந்த நல்ல மருத்துவ முறையின் நிவாரண மகிமையால்..!!

அண்ணலார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் தகுந்த நிவாரணியை அருளாமல் எந்த நோயையும் இறக்குவதில்லை..!" (ஆதாரம்:புகாரி)

அரபியில் ஹிஜாமா என்ற சொல் வழக்கு 'உறிஞ்சுதல்' என்று பொருட்படும். ஹிஜாமா மருத்துவம் பற்றி அண்ணலார் (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது.., "நீங்கள் எவற்றால் சிகிச்சை பெறுகிறீர்களோ, அவற்றிலெல்லாம் சிறந்தது குருதி உறிஞ்சி எடுப்பது 'ஹிஜாமா'........." என்றார்கள்! (ஆதாரம்: புகாரி) இதனை ஆங்கிலத்தில் "கப்பிங்"-Cupping என்றழைப்பார்கள்.

ஹிஜாமா மருத்துவம் வஹீ எனும் இறைசெய்தியின் வழிகாட்டல் கிடைத்த ஒரு மருத்துவ முறை என்பதால் ஏனைய எல்லா மருத்துவ முறைகளிலிருந்தும் அது வேறுபடுகிறது. அத்துடன் இஸ்லாமிய ஷரீஅத்-சட்டம்,நம்பிக்கைக் கோட்பாடு ஆகியவற்றுக்கு முரண்படாத ஒரு வைத்திய முறை எனலாம்! இன்னும், வஹீ இதனை சிறப்பான நோய் நிவாரண முறை என நற்சான்றிதழும் தந்து விட்டது. இது நபியவர்கள் செய்த திப்பு நபவியை இணைத்துச் சொல்வதாகும்.

அண்ணலார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்றில் (நோய்க்கு) நிவாரணம் உண்டு. இரத்தம் வெளியேற்றும் கருவியால் (உடலில்) கீறுவது, தேன் அருந்துவது, நெருப்பால் சூடிட்டுக் கொள்வது ஆகியனவே அந்த மூன்றும்..!(இருப்பினும்,) நான் என் சமுதாயத்தாருக்கு நெருப்பால் சூடிட்டுக் கொள்ள வேண்டாமெனத் தடை விதித்திருக்கின்றேன். அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி),ஆதாரம்: புகாரி.

பெரும்பாலான அம்சங்களில், நபிவழி.., முஸ்லிம்களால் அலட்சியப்படுத்தப்பட்டது போன்றே,மருத்துவத்திலும் கைவிடப்பட்டுள்ளது.



நோய்களுக்கு மருந்து சாப்பிட்டால் கசக்கும், ஊசி குத்தினால் வலிக்கும்.ஆனால் இந்த கப்பிங் மருத்துவம் வலியில்லாத நிவாரணி. இந்த கப்பிங்கின் போது நஞ்சு நீங்கும்போது வலியிருக்காது.ஆனால் அட்டை உறிஞ்சிவிட்ட இடத்தில் சிவப்பாக இருப்பது போன்று, உறிஞ்சிய இடத்தில் இரத்தம் கட்டியதுபோல் வடு ஏற்படும்.அந்த வடுகூட சில நாட்களில் மறைந்துவிடும்.

பல வருடங்களாக சிகிச்சை செய்தும் பயன் இல்லாத நிலையில் இருக்கும் நோய்கள், ஹிஜாமா மூலம் சில தினங்களில் பூரண குணமடைந்து விடுகின்றது. இது பல நோய்களான நாள்பட்ட தலைவலி, முதுகுவலி, அல்சர், ஆண்மைக்குறைவு, தூக்கமின்மை, அதிக தூக்கம் போன்ற இன்னும் பல தீராத நோய்களுக்கும் அல்லாஹ்வின் உதவியால் பூரண குணம் கிடைக்கின்றது.ஆனால் இந்த திப்புன் நபவி முஸ்லிம்களால் கைவிடப்பட்ட , மறக்கப்பட்ட , மறக்கடிக்கப்பட்ட மருத்துவமாக காணப்படுவதுதான் வேதனை!

பெரும்பாலான அம்சங்களில், நபிவழி.., முஸ்லிம்களால் அலட்சியப்படுத்தப்பட்டது போன்றே,மருத்துவத்திலும் கைவிடப்பட்டுள்ளது. ஆதனால் ஏனைய பிரச்னைகளைப் போன்று, மருத்துவத்திலும் நபி வழியை புறக்கணித்து துன்பத்திலும் துயரத்திலும் சிக்கி தவிக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும்,விமோசனம் பெற சுன்னா-நபிவழியின் பக்கம் திரும்ப வேண்டியது எத்துணை அவசியமோ,அதே போன்று உலகாயத ரீதியாக மருத்துவ குணம் பெறவும் சுன்னாவின் பக்கம் திரும்புவதே சிறந்தது..!

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:18 6/12/12 12:25:30 PM

மதுவின் மயக்கம்..! வாழ்வில் கலக்கம்..!!

தள்ளாடும் மனிதன்
கொண்டாடும்
போதை..!
தடுமாறும் பாதங்களால்
சேரமுடியா பாதை..!!

மது கொண்ட
மயக்கத்தால்
மகள் கூட மணக்கும்..!
வெறியேறிப் போனால்
தயங்கமாட்டாய்
கொலைக்கும்..!!

தடுக்க வேண்டிய
அரசோ
கடை வைத்துக்
கொடுக்கும்..!
ஒழிக்க வேண்டியதைத்
தவிர்த்து
ஊற்றிக் கொடுக்கச்
சொல்லும்..!!

குடித்துவிட்ட மதுவால்
ஆடை விலகி நிற்கும்..!
துர்நாற்றம் எடுக்கும்
வாயினால்
உறவுகளே விலக்கி
வைக்கும்..!!

குடித்துவிட்டுப் புலம்புவது
எல்லாம் நிம்மதியா..?
இல்லை..,
உயிரோடு உனக்கு நீயே
கட்டிக்கொள்ளும்
சமாதியா..?

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:19 6/12/12 12:25:31 PM

யூஸுஃபும் சகோதரர்களும்.! - 5

எல்மா ரூத் ஹார்ட்டர்

தமிழில்
மழலைப்ரியன்

கிணற்றுக்குள் சிக்கிக் கிடந்தார்..!!

அதே சமயத்தில் கிணற்றின் ஆழத்தில் சிக்கிக் கிடந்தார் யூஸுஃப். அங்கிருந்து தாமாக வெளியேற அவருக்கு ஒரு வழியும் தெரியவில்லை. ரொம்ப நேரம் கழித்து அவருக்கு ஏதோ ஓசை கேட்டது. யாரோ ஒருவர் ஒரு வாளியைக் கிணற்றில் போட்டார். அவர் பயணக் கூட்டத்திற்கு தண்ணீர் கொண்டு செல்பவர். அந்த மனிதன் கிணற்றுக்குள் யூஸுஃபைக் கண்டு வியப்புற்றார்.

"ஓ, என் நண்பர்களே! ஒரு நல்ல செய்தி! இங்கே ஓர் அழகிய இளைஞன்!"என்று குரல் கொடுத்தார். கயிற்றின் உதவியால், யூஸுஃப் வெளியே கொண்டு வரப்பட்டார். அவரைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். தங்களுடன் அவரை மறைத்து அழைத்துச் செல்ல முடிவு செய்தனர். எகிப்து சென்றவுடன் அவரை நல்ல விலைக்கு விற்கவும் தீர்மானித்தனர். இதையெல்லாம், மறைந்து நின்று கவனித்தனர் அவருடைய மூத்த சகோதரர்கள். பயணக் கூட்டத்தாரிடம் சென்று,அவரை ஒரு சிறிய தொகைக்கு விற்றும் விட்டார்கள்.

பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!

திருக் குர்ஆன்

அத்தியாயம் 110
அந்-நஸ்ர்
மதீனாவில் அருளப்பட்டது
வசனங்கள்:3

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ①

اِذَا جَآءَ نَصْرُ اللهِ وَالْفَتْحُ ②

110:1 இ(za)ஜா(jaa)அ'
நஸ்ருல்லாஹி
வல்(f)ஃபத்ஹு

110:1 அல்லாஹ்வின் உதவியும், வெற்றியும் வந்து விடும்போது..!

وَرَاَيْتَ النَّاسَ يَدْخُلُوْنَ فِيْ
دِيْنِ اللهِ اَفْوَاجًا ③

110:2 வராதன்னாஸா ய(d)த்(qh)லூன (f)ஃபீ(di) தீனில்லாஹி அ(f)ஃப்வாஜா.

111:2 மேலும் (நபியே!) அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் திரள்திரளாக நுழைவதை நீர் காணும்போது..!

فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَاسْتَغْفِرْهُ
اِنَّهٗ كَانَ تَوَّابًا ④

112:4 (f)ஃபஸ(b)ப்பிஹு (b)பிஹம்(di)தி ர(b)ப்பிக வஸ்(tha)த(gh)க் (fi)ஃபிர்ஹு இன்னஹு கான தவ்வா(ba)பா

111:3 நீர் உம் இறைவனைப் புகழ்ந்து கொண்டு அவனைத் துதிப்பீராக! மேலும், அவனிடம் பாவமன்னிப்புக் கோருவீராக! நிச்சயமாக அவன், பாவமன்னிப்புக் கோரிக்கையை பெரிதும் ஏற்பவனாக இருக்கின்றான்.

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:20 6/12/12 12:25:32 PM

தேசீய நலனில் முஸ்லிம்களின் பங்கு..! - 3
ஃபிப்ரவரி,மே 2012 இதழ் முகப்புக் கட்டுரை தொடர்ச்சி..!

அற்பமான கற்கள்,முட்களை அகற்றுவதை இறைநம்பிக்கையின் ஒரு கிளையாக சொல்லும் மாரககம் இஸ்லாம்!அதுமட்டுமல்ல, வெட்கமும் இறைநம்பிக்கையின் ஒரு கிளை என்று எழுபதுக்கும் அதிகமான கிளைகளில் மூன்றை மட்டும் குறிப்பிட்டு சொன்னார்கள். இன்னும் பலவற்றை நாம் தேடிப் பார்க்க வேண்டும். அவ்வாறு தேடிப் பார்த்தால், அவற்றில் பெரும்பாலானவை, மனிதநலன்களுடன் தொடர்புடையவையாக இருப்பதை நாம் காண முடியும்.

தர்மத்தின் தூதர்கள்..!

"இறைநம்பிக்கையின் இந்த கிளைகளை திருக் குர்ஆன் - நபிபொழி ஒளியில் இமாம் பைஹகீ அவர்கள் தனது, நூலில் அழகாக விளக்குகின்றார்கள். ஒவ்வொருவரும் நன்மை செய்வதை.., அதனடிப்படையில் வாழ்வதை விரும்புகின்றார்கள்.அனைவருமே தீமையை வெறுக்கின்றார்கள்,தீமையை ஒழிக்கப் போராடுவதைப் பாராட்டுகின்றார்கள்.., அதனைப் புண்ணிய செயல் என மதிப்பிடுகின்றார்கள்.

ஆனால், மார்க்கத்தின் அடிப்படையாக, இறைநம்பிக்கையின் அடிப்படையாக..,சுவனம்-நரகம் என்பதைத் தீர்மானிக்கும் அடிப்படையாக இதனை இஸ்லாம் மட்டும்தான் சொல்கின்றது.

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒருமுறை வினவினார்கள்: தொழுகையை.., நோன்பை.., தான-தர்மத்தைவிட.., சிறந்த ஒன்றை நான் உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா..?" அதற்கு நபித்தோழர்கள் "ஆம்" என்றபோது, "பகைமையில் இருக்கும் இரு குழுக்கள்.., இரு சமூகங்கள்.. மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்துவது.., சுன்னத்தான-உபரியான தொழுகைகள்.., நோன்புகள்.., தான-தர்மங்களைவிட சிறந்தது" எனும் பொருள்பட கருத்து கூறினார்கள்.

அடிப்படையான இறைவணக்க-வழிபாடுகளுக்குத் தரப்படும் முக்கியத்துவம் இத்தகைய சமூகப்பணிகளுக்கும் வழங்கப்படுகின்றது என்பது இஸ்லாமிய சிறப்பு எனில் அது மிகையல்ல!

ஒருமுறை மஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:எனது சமுதாயத்தின் நல்ல-தீய செயல்கள் அனைத்தும் எனக்கு எடுத்துக்காட்டப்பட்டன.நற்செயல்களின் பட்டியலில், பாதையில் கிடக்கும் தீமை விளைவிக்கக்கூடிய கற்கள்,முட்கள் ஆகியவற்றை அகற்றுவது போன்ற சின்னஞ்சிறிய நற்செயல்களைக்கூட நான் கண்டேன்..!"

தர்மம் என்பது என்ன என்பதை வரைவிலக்கப்படுத்த வந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: நீங்கள் ஆற்றக்கூடிய நன்மையான.., பயனுள்ள செயல்கள் ஒவ்வொன்றும் தர்மமே!" என்றார்கள். காசு,பணம்,பண்டம்,பொருள் கொடுத்துதவுவதே மட்டுமல்ல தர்மம்!மாறாக, ஒரு சகோதரனைப் பார்த்து புன்முறுவல் பூப்பது தர்மம்,காது கேளாத ஒருவருக்கு எத்தி வைப்பது தர்மம்,பாதை அறியாதவனுக்கு பாதையை அறியத் தருவது தர்மம்...,திசையறியாது திக்கின்றி திரிபவனுக்கு நேர்வழி காட்டச் செய்வது தர்மம்.தேவையை நிறைவேற்றிக் கொள்ளச் செல்லும் ஒருவனுடன் அவன் தேவையை நிறைவேற்றிக் கொடுக்க, நிறைவேற்றிக் கொள்ள பயணம் செல்வது தர்மம், தனது வாகனத்தில் பொருள்களை ஏற்றிக்கொள்ள இயலாது தடுமாறித் தவிக்கும் மனிதனுக்கு அதற்காக உதவுவது தர்மம்.

தனது வாகனத்தில் பொருள்களை ஏற்றிக்கொள்ள இயலாது தடுமாறித் தவிக்கும் மனிதனுக்கு அதற்காக உதவுவது தர்மம்.

"தான் சார்ந்த நாட்டுப் பணிகளில், சமூகப் பணிகளில் ஒத்துழைத்து.., ஈடுபாடு காட்ட வேண்டும்.., அந்தப் பணிகள் நன்மையானவைகளாக இருக்கும் பட்சத்தில்..!"என்று சொல்லும் மார்க்கம் இஸ்லாம்.

அடுத்த இதழில்..,இறைநாடின்..!

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:21 6/12/12 12:25:33 PM

மு.அ.அப்துல் முஸவ்விர்

ஓங்க வேண்டும் வனிதையரின் மேன்மை..!
ஒழிய வேண்டும் அவர் மீதான வன்மை..! -3 தொடர்ச்சி..!

சாத்திய சட்டங்கள்..! கொடுமைக்கு விலங்குகள்..!!

பாருங்கள்!இது நடைமுறைச் சாத்தியமாக்கப்படால், குடும்ப பாலியல் பலாத்காரங்களுக்கு வழி இருக்குமா என்ன..?

அதேபோன்று, பணியிட பாலியல் வன்முறைக்கு ஒரே தீர்வு ஆண்-பெண் சுதந்தர கலந்துறவாடல் சூழலை எந்தவிதத்திலும் அனுமதிக்காதிருப்பதுதான். அவ்வாறெனில் பெண்களின் பணியிட சுதந்தரம்..? ஏன்..? பெண்கள் மட்டுமே தேவைப்படும் துறைகள் எத்தனையோ இருக்கின்றனவே..! அங்கு அவர்களுக்குரிய காலியிடங்களை அதிகரித்து வாய்ப்பை வழங்கலாமே..!

உதாரணத்துக்கு மகளிரின் உண்மையான சுதந்தரத்தைக் கருத்திற் கொண்டு,ஸவூதி அரேபிய அரசாங்கம், உள்ளாடை விற்பனையகங்களில் ஆண் பணியாட்கள் நியமனத்துக்கு தடை விதித்திருக்கின்றது. அதேபோன்று கனரக தொழில்சார் துறைகளில் மகளிர் பணிநியமனத்துக்கு தடை விதித்திருக்கின்றது. அடுத்து கடத்தல் மற்றும் பொருளாதாரப் பண்டங்களாய்.., வன்கொடுமைக்குள்ளாக்கப்படும் அநீதியைக் களைய ஆண்கள் மீது சட்டத்தைக் கடுமையாக்கவும்,பெண்களுக்குரிய பாதுகாப்பையும் வாழ்வாதார அம்சங்களையும் உறுதி செய்யும் வகையிலான திட்டங்களை முன்னிறுத்தி செயல்படுத்த வேண்டும்.

ஸவூதி அரேபிய அரசாங்கம், உள்ளாடை விற்பனையகங்களில் ஆண் பணியாட்கள் நியமனத்துக்கு தடை விதித்திருக்கின்றது.

மொபைல் கேமராவில் பெண்களை ஆபாசமாகப் படம் பிடித்து, மிரட்டி, வன்புணர்வு செய்வது போன்ற முறையற்ற செயல்களில் ஈடுபடக்கூடியவர்கள் பெரும்பாலும் தனிமனிதர்கள் அல்லர். இதன் பின்னணியில் பல விபச்சாரக் கும்பல்கள் உள்ளன. செல்பேசி கேமரா, இணையம் ஆகியவற்றின் தவறான பயன்பாடு, ஆடம்பர வாழ்வின் மீதான மோகம், பொருளாதார நெருக்கடிகள் ஆகியனவும் இதற்கு மூல காரணிகள்!மனித உரிமை அமைப்புகளின் கணக்குப்படி இந்தியாவில் 43000 கோடி ரூபாய் அளவுக்குப் பாலியல் தொழில் நடைபெறுகிறது.

சுற்றுலா வளர்ச்சி எனும் பெயரில் அரங்கேற்றப்படுகின்ற அருவருப்புக்கள், மஸாஜ் செண்டர்கள் எனும் போர்வையில் அழகு நிலையங்களின் விபச்சார பின்னணி,இந்தச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களைப் பாதுகாக்கும் அதிகார வர்க்கங்கள் இவற்றையெல்லாம் கடும் தண்டனைக்குள்ளாக்குவதுதான் சரியான தீர்வாக இருக்கும்.

அதேபோன்று பதின்பருவத்தினரிடத்தில் பாலியல் கல்வி குறித்த விழிப்பு உணர்வுக்கு பாலியல் கல்வியை அறிமுகப்படுத்தினால், ஈவ்டீஸிங் உள்ளிட்ட கொடுமைகள் தவிர்க்கப்படும் என்று சமூகவியலாளர்கள்கூட சப்பை கட்டுகின்றார்கள்.இதுவா தீர்வாக முடியும்..?செயல்ரீதியான விளக்கமுறைகளுக்கு பதின்பருவத்தினர் பாலியல் பாலபாடங்களை பயன்படுத்திக் கொண்டால் நிலைமை என்னவாகும்..?

எனவே,பதின்பருவ கல்வி முறையில் மாற்றம் கொணர வேண்டும்.மானவ-மாணவியருக்கு தனித்தனியாக பள்ளி கல்லூரிகள் அல்லது குறைந்தபட்சம் தனித்தனியான வகுப்பறைகள், கலந்துறவாடுதலுக்கு வாய்ப்பே தராத வகையிலான கட்டமைப்பு இவைகள் கொண்டு கல்வி முறையை சீர்படுத்தினால், பதின்பருவ மகளிர் மீதான கொடுமைகளுக்கு ஏது வழி..?

அடுத்த இதழில்.., இறைநாடின்..!

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:22 6/12/12 12:25:34 PM

முஹம்மத் உஸைர்

11 வயதில் 4 உலக சாதனை நெல்லை மாணவி அபாரம் ..!

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை சங்கர் காலனியை சேர்ந்த கல்யாண குமாரசாமிருசேது ராகமாலிகா தம்பதியரின் மகள் விசாலினி (11), அங்குள்ள தனியார் பள்ளி ஒன்றில் 8ம் வகுப்பு படித்து வருகிறார். இவர், தனது 11 வயதில் 4 உலக சாதனை மற்றும் பல்வேறு சான்றிதழ்களை பெற்று சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் சிஸ்கோ நிறுவனம் இன்ஜினியரிங் படித்த மாணவர்களுக்காக நடத்தும் சிசினெ்ஏ, சிசினெ்பி போன்ற தேர்வுகளை, எனது 10 வயதில் எழுதி சாதனை படைத்துள்ளார். இந்த தேர்வு எழுதியதன் மூலம் பாகிஸ்தான் நாட்டின் 12 வயது மாணவன் நிகழ்த்திய சாதனையை முறியடித்துள்ளார்.இதற்காக, பாகிஸ்தான் நாடு இவரைக் கவுரவப்படுத்தியது.

பிரிட்டிஷ் கவுன்சில், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ஐடிபிஜ ஆஸ்திரேலியா ஆகியவை இணைந்து, உலக அளவில் நடத்தும் ஐஇஎல்டிஸ் தேர்வை 11 வயதில் எழுதி சாதனை படைத்துள்ளார சர்வதேச அளவில் நடத்தப்படும் தேர்வுகளை எழுதி பல சான்றிதழ்களை பெற்றுள்ளார்.மேலும், பல்வேறு இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கு சென்று பிஇ, பிடெக் மாணவர்களுக்கு, நெட்வொர்க் சம்பந்தமாக பாடம் நடத்தி வருகிறார். பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் சர்வதேச கருத்தரங்குகளுக்கு சிறப்பு விருந்தினராக சென்று உரையாற்றி வருகிறார்.

இந்த இளம் சாதனையாளர்.குவைத் பல்கலைக்கழகத்துக்கும் வர இருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ஆனால், வழக்கம்போல இந்த சாதனையாளரும் வறுமையின் பிடியில் உள்ளபடியால், இவரது பெற்றோர் மத்திய-மாநில அரசுகளின் உதவியை நாடி உள்ளனர்.

புதிய தலைமுறை கல்வி உதவி..!

ப்ளஸ் 2 தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தும் பொருளாதாரக் காரணங்களால் மேற்படிப்பைத் தொடர இயலாத மாணவரா?தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தரம் வாய்ந்த கல்லூரிகளோடு இணைந்து உங்களுக்கு இந்த ஆண்டும் உதவ முன் வந்திருக்கின்றது புதிய தலைமுறை தமிழ் இதழ்!விவரங்கள் அருகே..!

பிரிட்டிஷ் கால இந்தியா..!

பிரிட்டிஷ் கால இந்தியா எப்படி இருந்தது என்பதைக் காட்டும் நூறு வருடங்களுக்கு முந்தைய புகைப்படங்கள், எடின்பர்க்-இல் இருந்த ஒரு காலணிப் பெட்டியில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.178 நெகட்டிவ்கள் அதில் இருந்ததாக சொல்லப்பட்டிருக்கின்றது. ஒடிசா,கோல்கொட்டா,டார்ஜிலிங் உள்ளிட்ட இடங்களைப் பிரதிபலிக்கும் இந்த புகைப்படங்களில் வாள்சண்டை,கடைத்தெரு,வீட்டுக்கு வெளியே மகளிர்,விளையாடும் ஆங்கில துரை என்று பல பிரதிபலிப்புக்கள் அந்தப் படங்களிலிருந்து தெரிய வருகின்றன.

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:23 6/12/12 12:25:35 PM

அறிவுப் போட்டி!

இந்த (ஜூன்) இதழ் வசந்தம் வாசித்துவிட்டீர்களா? இனி, பின்வரும் கூற்றுக்களுக்கு உரியவர்களின் படங்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன. கூற்றுக்குரிய எண்களை பொருத்தமானவர்களின் படங்களுக்கு அருகில் உள்ள வட்டத்தில் இடுக..!

வினாக்கள்

1 சிறிய வயதில் பெரிய சாதனை!

2 மறந்துபோன நபிவழி மருத்துவம் இது..!

3 இதன் மயக்கம் வாழ்வையே நாசப்படுத்திடும்..!

4 உணவாகவும் மருந்தாகவும் பயன்படுவது.,!

5 உயிர் காக்கும் தொழில் இவருடையது!

விதிமுறைகள்

1. இப்போட்டி ஆண்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந் தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். - DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30.09.2012 10. முடிவுகள் வசந்தம் நவம்பர் 2012 இதழில் வெளியாகும். இறை நாடின்.!

சுயவிவரம்

பெயர் Name

____

குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

தொலைபேசி Cell No.

____

மின்னஞ்சல் email ID

____

தேசிய இனம்/நாடு
Nationality

____

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait

____

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:24 6/12/12 12:25:36 PM

ரம்மிய ரமளானை இறைவிருப்பத்துக்கு ஏற்ப முன்னெடுக்க உங்களைத் துரிதப்படுத்த தயாராகிக் கொண்டிருக்கின்றது..!

வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

அதிக பக்கங்களுடன் உங்கள் அழகு வசந்தம்!

காத்திருங்கள் ஒரு உன்னத அனுபவத்துக்கு..!



இலவச இணைப்பு..!

DR. ஜாகிர் நாயக் அவர்களின்

பல்வேறு மதங்களில் இறை பற்றிய கண்ணோட்டம்..!

தமிழில்..!
இளவேனில்

VASANTHAM - June 2012 FInal New.indd Sec1:25 6/12/12 12:25:37 PM

விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்கள் உள்ளே..!

أهل القرآن

هم أهل الله وخاصته

مسابقة سليمان صالح الرهيماني

The "11th" Holy Qur'an Memorization Competition

للمهتدين الجدد والجاليات المسلمة غير العربية

For New Muslims & Non-Arab Muslim Communities

لحفظ القرآن الكريم

திருக் குர்ஆன் மனனப் போட்டி

அரபியரல்லாத முஸ்லிம்களுக்கும்
புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருக்குமானது

இறைமறையின் மனனம்..! வெளிப்படுத்த ஓர் அழகு சந்தர்ப்பம்..!

www.vasanthamtamil.com
http://ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்!

www.facebook/vasanthamtamil

facebook

twitter

www.twitter/vasantham2k

விவரங்கட்கு
2244117 Extn:208 செல்லிடைப்பேசி: 97266683